| | |
|---|---|
| கலைஞர் மகளிர் உரிமை தொகை திட்டம்<br><br> | செய்தி<br>இது பெண்கள் முதலீட்டிற்கான வருமானத் திட்டம் ஆகும் செலவினம் அல்ல<br><br>• பெண்களுக்குகான அதிகாரம் அளிக்க 'கலைஞர் மகளிர் உரிமை தொகை' என்ற நலத்திட்டம் வழி வகுக்கும் என தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் கூறுகிறார்<br><br>• திராவிட முன்னேற்றக் கழகத்தை (திமுக) தொடங்கிய சி.என். அண்ணாதுரையின் பிறந்தநாளை முன்னிட்டு இந்தத் திட்டம் தொடங்கப்பட்டுள்ளது.<br><br>முக்கிய குறிப்புகள்<br><br>• கலைஞர் மகளிர் உரிமை தோகை (KMUT) திட்டம் என்பது தமிழ்நாட்டில் உள்ள தகுதியான குடும்ப தலைவிகளுக்கு மாதந்தோறும் ரூ 1,000 நிதியுதவி வழங்கும் அடிப்படை வருமானத் திட்டமாகும்.<br>• இத்திட்டத்தை முதல்வர் மு.க.ஸ்டாலின் 2023 ஆம் ஆண்டு செப்டம்பர் 15 நாள் அன்று தொடங்கி வைத்தார்.<br><br>• இந்தத் திட்டத்திற்கு தகுதிபெற ஒரு பெண் குடும்பத் தலைவராக இருக்க வேண்டும், தமிழ்நாட்டில் வசிப்பவராக இருக்க வேண்டும் மற்றும் மாத வருமானம் ரூ. 10,000 க்கும் குறைவாக இருக்க வேண்டும். |
| சி.என். அண்ணாதுரை | முக்கிய குறிப்புகள் :<br>• 'அண்ணா' என்று அழைக்கப்படும் சி.என். அண்ணாதுரை 1967ஆண்டு முதல் 1969 ஆண்டில் இறக்கும் வரை தமிழ்நாடு மாநிலத்தின் நான்காவது மற்றும் கடைசி முதலமைச்சராக பணியாற்றிய ஒரு இந்திய அரசியல்வாதி ஆவார்.<br><br>• தமிழ்நாட்டில் திராவிட அரசியல் கட்சியான திராவிட முன்னேற்றக் கழகத்தை (DMK) தோற்றுவித்தவர் .<br><br>•அண்ணாதுரை 1909 ஆம் ஆண்டு செப்டம்பர் 15 அன்று மெட்ராஸ் மாகாணத்தில் உள்ள காஞ்சீவரத்தில் பிறந்தார்.<br><br>• சென்னை பச்சையப்பா கல்லூரியில் சட்ட படிப்பை பயின்றார். பட்டம் பெற்ற பின்பு வழக்கறிஞராகவும் பத்திரிகையாளராகவும் பணியாற்றினார். |
| பாரத் புதிய கார் மதிப்பீட்டுத் திட்டம் **(BNCAP)** | செய்தி:<br>சாலை பாதுகாப்பு குறித்த 'பாரத்' ஸ்டாம்ப் .<br><br>•இந்தியா சாலையில் ஏற்படும் விபத்து குறித்து தன்னோடைய பரிசோதனை நெறிமுறைகளை அறிவித்துள்ளது. |

To get free Live Classes, Materials Scan this QR Code & Download our Adda247 App

| | |
|---|---|
| <br> | • இதற்கு பாரத் புதிய கார் மதிப்பீட்டுத் திட்டம்(BNCAP)என பெயரிடப்பட்டுள்ளது .<br><br>•விபத்து பரிசோதனை மதிப்பீட்டு அமைப்பு கொண்ட உலகின் ஐந்தாவது நாடாக இந்தியா உருவெடுத்துள்ளது.<br><br>• 4 மடங்கு செலவை விதிக்கும் வெளிநாட்டு நிறுவனங்களை இந்தியா சார்ந்திருப்பதை இது குறைக்கிறது.<br><br>முக்கிய குறிப்புகள்:<br><br>• உலகளாவிய புதிய கார் மதிப்பீட்டு திட்டத்தின் உதவியுடன் சாலைப் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சகத்தால் பாரத் புதிய கார் மதிப்பீட்டுத் திட்டம் வடிவமைக்கப்பட்டது.<br><br>• நாட்டின் முன்னணி ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு நிறுவனமான இந்தியாவின் ஆட்டோமோட்டிவ் ரிசர்ச் அசோசியேஷன் இதன் பரிசோதனை நிறுவனமாகும்<br><br>• பாரத் தேசிய கார் மதிப்பீட்டுத் திட்டத்தின் பரிசோதனை நெறிமுறை உலகளாவிய விபத்து பரிசோதனை நெறிமுறைகளுடன் ஒத்து போக்கி உள்ளது . இந்தத் திட்டம் சோதிக்கப்பட்ட கார்களுக்கு 1 முதல் 5 வரை தர மதிப்பீட்டை வழங்கும் இதில் 1 மிகக் குறைவான தர மதிப்பீடு ஆகும். |
| பல்லவ கோவில்<br><br> | செய்தி:சோழர்களால் புனரமைக்கப்பட்ட பல்லவ கோயில்<br><br>•உத்திரமேரூருக்கு அருகில் உள்ள திருப்புலிவனத்தில் பழமையான மற்றும் வரலாற்று சிறப்புமிக்க சிவன் கோவில் உள்ளது. இங்கு உள்ள சிவபெருமானை வியாக்ரபுரீ ஸ்வரர் என்று மக்கள் வழிபடுகிறார்கள்.<br><br>• இக்கோயில் பல்லவர் காலத்தைச் சேர்ந்தது என்று கல்வெட்டுகள் மூலம் அறிய முடிகிறது.<br><br>முக்கிய குறிப்புகள் :<br>• பல்லவர்களின் கட்டட அமைப்பு செங்கற்களால் ஆனது மேலும் முதலாம் குலோத்துங்க சோழன் (கி.பி. 1070-1125) ஆட்சியில் கிரானைட் மூலம் மீண்டும் இக்கோவில் கட்டப்பட்டதாகத் தெரிகிறது.<br><br>•மூன்று அடுக்கு கோபுரத்துடன் நுழைவாயிலில் கிழக்கு நோக்கியவாறு கோவில் அமைந்துள்ளது.<br><br>• கோபுரத்திற்கு வெளியே நந்தி மண்டபம், பலிபீடம் மற்றும் பக்கத்தில் வியாக்ர தீர்த்தம் எனப்படும் கோயில் குளம் உள்ளது.. |
| இலங்கை கடற்படையினரால் மீனவர்கள் கைது செய்யப்பட்டனர் | செய்தி |

<table>
<tr>
<td>
</td>
<td>இலங்கை கடற்படையினரால் சிறைபிடிக்கப்பட்ட மீனவர்களை விடுவிக்க நடவடிக்கை எடுக்க வலியுறுத்தி வெளியுறவு துறை அமைச்சர் ஜெய்சங்கருக்கு முதல்வர் ஸ்டாலின் கடிதம்.<br><br>• இலங்கை கடற்படையினரால் கைது செய்யப்பட்ட 17 மீனவர்களை விடுவிக்க இலங்கை அரசுடன் தூதரக முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும் என்று வெளியுறவுத்துறை அமைச்சர் ஜெய்சங்கருக்கு தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் கடிதம் எழுதியுள்ளார்.<br><br>• சர்வதேச கடல் எல்லைக் கோட்டை (IMBL) தாண்டி மூன்று இயந்திரப் படகுகளுடன் 17 தமிழக மீனவர்கள் இலங்கைக் கடற்பரப்பிற்குள் நுழைந்ததாகக் கூறி இலங்கைக் கடற்படையினரால் கைது செய்யப்பட்டனர்.<br><br>முக்கிய குறிப்புகள் :<br><br>• சர்வதேச கடல் எல்லை கோடு (ஐ.எம்.பி.எல்) என்பது பூமியின் நீர் மேற்பரப்பு பகுதிகளை கோட்பாட்டுடன் பிரிக்கும் கோடு ஆகும். இது அருகே அமைந்துள்ள நாடுகள் உடைய இறையாண்மையின் கடல் மண்டலங்களையும் வரம்புகளையும் வரையறுக்கிறது.<br><br>• இது சம்பந்தப்பட்ட நாடுகளுக்கிடையேயான தொடர் ஒப்பந்தங்கள் மற்றும் உடன்படிக்கைகள் மூலம் செய்யப்படுகிறது.<br><br>இந்தியாவில் சர்வதேச கடல் எல்லை கோடு என்பது அண்டை நாடுகளுடன் பல ஒப்பந்தங்கள் மற்றும் உடன்படிக்கைகள் மூலம் வரையறுக்கப்பட்டுள்ளது.<br>அவற்றுள்:<br>1.1974 ஆம் ஆண்டு இந்தியா - இலங்கை கடல் எல்லை ஒப்பந்தம்.<br>2. 1976 ஆம் ஆண்டு இந்தியா-மாலத்தீவு கடல் எல்லை ஒப்பந்தம் .<br>3. 2014ஆம் ஆண்டு இந்தியா-வங்கதேசம் கடல் எல்லை ஒப்பந்தம்.<br>4. 2017 ஆம் ஆண்டு இந்தியா-மியான்மர் கடல் எல்லை ஒப்பந்தம்.</td>
</tr>
<tr>
<td>சிங்கப்பூர் நிறுவனமான Memsif Innovations இந்தியாவில் தனது முதல் உலகளாவிய பொறியியல் மையம் ஒன்றை அமைக்கவுள்ளது</td>
<td>செய்தி:<br><br>சிங்கப்பூர் நிறுவனம் கழிவுகளை மதிப்பு மிக்கவையாக மாற்ற இந்தியாவில் மையம் ஒன்றை அமைக்க திட்டமிட்டுள்ளது.<br><br>முக்கிய குறிப்புகள் :<br><br>• சிங்கப்பூரை சேர்ந்த கழிவுகளை மதிப்பு மிக்கவையாக மாற்றும் நிறுவனமான மெம்சிஃப்ட் இன்னோவேஷன்ஸ்(Memsift Innovations) தனது முதல் உலகளாவிய பொறியியல் மையம் ஒன்றை இந்தியாவில் அமைக்க உள்ளது.<br><br>• இதன் செயல்பாடுகளை விரிவுபடுத்த 10 மில்லியன் டாலர் திரட்டப்படும் என்று அதன் தலைமை நிர்வாக அதிகாரி மற்றும் நிறுவனர் ஜே. ஆண்டனி பிரின்ஸ் கூறுகிறார் .</td>
</tr>
</table>

| | |
|---|---|
| | • ஐந்து ஆண்டுகளாக இயங்கி வரும் இந்த நிறுவனம் சுமார் 83 கோடி ரூபாய் நிதி திரட்டும். ஹோசூரில் அமையவுள்ள மையத்திற்கு 2.5 ஏக்கர் நிலம் தேவைப்படுகிறது .<br><br>• "அடுத்த 3 முதல் 5 ஆண்டுகளில் 50 கோடி ரூபாய் செலவிடப்பட்டு 70 முதல் 80 பொறியாளர்கள் வரை வேலைக்கு அமர்த்தப்படுவர்." |

*Copyright © by Adda247*

*All rights reserved. No part of this document may be reproduced, stored in a retrieval system or transmitted in any form or by any means, electronic, mechanical, photocopying, recording or otherwise, without prior permission of Adda247.*